# 17

## சபை:

# இதன் உதவிக்காரர்கள், அவர்களின் தகுதிகள் மற்றும் கடமைகள்

## முதலாவது (நியமிக்கப்பட்ட) உதவிக்காரர்கள்

1. ***முதலாவது உதவிக்காரர்களை நியமித்த வேளை எப்படிப்பட்டதாயிருந்தது (அப். 6:1-4)?***
2. ***எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (அப். 6:5)?***
3. ***யார் அவர்களைத் தேர்ந்தெடுத்தனர் (அப். 6:2, 3, 5)?***
4. ***தகுதிகளைக் குறிப்பிட்டவர் யார் (அப். 6:2, 3)?***
5. ***அவர்கள் எவ்வாறு நியமிக்கப்பட்டனர் (அப். 6:6)?***
6. ***இந்த மனிதர்கள் உதவிக்காரர்களாய் இருந்தனர் என்று ஒருவர் எவ்வித்தில் அறியலாம்?***

   *கிரேக்க வார்த்தையான diakoneo என்பது ''Serve'' (''பந்தி விசாரணை'') என்று (6:2ல்) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதே வார்த்தையிலிருந்து தான் பவுல் 1 தீமோ. 3:10, 13ல் "உதவிக்காரராய் ஊழியம் செய்தல்" என்பதைப் பயன்படுத்தியுள்ளார்.*

## அட்டவணைப்படுத்தப்பட்ட தகுதிகள்

| ***எதிர்மறை அடையாளங்கள்*** | ***வசனக் குறிப்புகள்*** | ***அர்த்தம்*** |
|---|---|---|
| *இரு நாக்கு உள்ளவராய் இராமை* | *1 தீமோ. 3:8* | *ஒருவரிடத்தில் ஒன்றும் இன்னொருவரிடத்தில் வேறொன்றும் கூறாமை* |
| *மதுபானப் பிரியம்* | *1 தீமோ. 3:8* | *மதுபானத்திற்கு அடிமையாகாமை.* |
| *இழிவான ஆதாயத்தை இச்சியாமை* | *1 தீமோ. 3:8* | *ஆதாயத்தையே மிகவும் முக்கியமானதாய் கருதாமை* |
| ***நேர்மறை அடையாளங்கள்*** | | |
| *குற்றஞ்சாட்டப்படாத தன்மை* | *1 தீமோ 3:10* | *அவருக்கெதிராக (குற்றம்) ஒன்றும் நிரூபிக்கப்படக் கூடாமை* |

| | | |
|---|---|---|
| நல்லொழுக்கம் | 1 தீமோ. 3:8 | வினயம் அல்லது மேன்மைப்பட்டிருத்தல் |
| விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியில் காத்துக் கொள்ளுதல் | 1 தீமோ. 3:9 | உண்மையான இருதயத்தினின்று தம்மால் முடிந்த அளவு சிறப்பாய்ச் செய்யும் தன்மை |
| ஒரே மனைவியை உடையவர் | 1 தீமோ. 3:12 | பல மனைவிகள் கொண்டிராமை |
| முன்னதாகச் சோதிக்கப்படுதல் | 1 தீமோ. 3:10 | அவரது பண்பு சோதித்தறியப்பட வேண்டும் |
| தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துதல் | 1 தீமோ. 3:12 | தனது வீட்டை தக்க வகையில் ஆளுதல் |

## தகுதிகளின் மீது வினாக்கள்

1. ***உதவிக்காரருடைய முக்கியத்துவமாக நீங்கள் நினைப்பது என்ன?***
2. ***எதிர்மறை அடையாளங்களாக உள்ளவை எத்தனை? அவை ஒவ்வொன்றின் அர்த்தத்தைக் கொடுக்கவும்.***
3. ***நேர்மறைப் பண்புகள் எத்தனை? அவை ஒவ்வொன்றையும் விளக்கப்படுத்தவும்.***
4. ***மூப்பர்கள் "போதிக்க ஏற்புடையவர்கள்" என்றிருக்க வேண்டுமானால், உதவிக்காரர்கள் என்ன செய்ய வேண்டும் (1 தீமோ. 3:10, 13)?***
5. ***மூப்பர்களின் தகுதிகளுடன் பொருந்தி வரும் எதிர்மறை அடையாளங்கள் யாவை?***
6. ***மூப்பர்களின் தகுதிகளுடன் பொருந்தி வரும் நேர்மறை அடையாளங்கள் யாவை?***
7. ***மூப்பர்கள் எவ்வகையில் உதவிக்காரர்களை விட மேம்பட்டிருக்க வேண்டும்?***

## உதவிக்காரர்களின் ஊழியம்

1. ***முதலாவது (நியமிக்கப்பட்ட) உதவிக்காரர்கள் எவற்றைச் செய்ய வேண்டியவர்களாயிருந்தனர் (அப். 6:2-4)?***
2. ***உதவிக்காரர்கள் எவற்றைச் செய்ய வேண்டும் என்று பவுல் கூறினார் (1 தீமோ. 3:10, 13)?***
   *அ. உதவிக்காரர்களின் சில ஊழியங்கள் என்ன (அப். 6:1-3ஆ)? "அன்றாடக விசாரணையில்" எது அடங்கியிருந்தது (அப். 4:34, 35)?*
   *ஆ. உதவிக்காரர்களைப் பண்பு படுத்த வேண்டிய நிதிநிலைத் திறன் என்ன (அப். 2:45; 4:35)?*
   *இ. என்றால், பின்வரும் விஷயங்களுக்கு யார் பொறுப்பாளியாய் இருக்க வேண்டும்: சபை கூடும் இடத்தின் நலம் பேணுதல் -*

*அதன் விளக்குகள் அமைத்தல், சுத்தம் செய்தல், காற்றோட்ட வசதி செய்தல், பராமரித்தல், கர்த்தருடைய பந்தியை ஆயத்தம் செய்தல், வருபவர்களுக்கு சேவை செய்தல், ஞானஸ்நானத் தொட்டியைப் பராமரித்தல், வருகிறவர்களை வாழ்த்துதல், மற்றும் தர்மப் பணிகள் செய்தல்?*

## உதவிக்காரர்களின் பலன்

1. ***உண்மையான உதவிக்காரர்கள் மற்றவர்களிடமிருந்து தங்களுக்குப் பெறும் ஆதாயம் என்ன (1 தீமோ. 3:13)?***
2. ***அவர்கள் கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தில் பெறும் ஆதாயம் என்ன (1 தீமோ. 3:13)?***

## பொதுவானவை

1. ***இளைஞர் ஒருவர் உதவிக்காரராக ஊழியம் செய்யலாமா?***
2. ***மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோரின் ஊழியம் எவ்வகையில் பிரிக்கப்பட முடியாததாக உள்ளது?***
3. ***ஆவிக்குரியவைகளும் சரீரத்துக்குரியவைகளும் எவ்விதம் சமானப்படுத்தப்பட வேண்டும்?***